## புலிகளின் குரல்

# புலிகளின் பின்னால் உலகத் தமிழர்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடுதலைப் போராட்டமாக மாறிநிற்கின்றது.

புலிகள் இயக்கத்தை உன்னதமான - ஆற்றல்கள் நிறைந்த - ஒரு போராட்டசக்தியாக உலகம் கணித்துவிட்டது. அத்துடன் ஒழுக்கமும் கட்டுப்பாடும் அர்ப்பண உணர்வும் நிறைந்த ஒரு விடுலை இராணுவத்திற்கு ஒரு உலக உதாரணமாக, புலிகள் இயக்கம் காட்டப்படுகின்றது.

சிங்கள ஆயுதப் படைகளினதும் இந்திய வல்லாதிக்கத்தினதும் இராணுவ - பொருளாதார இராஜதந்திர அழுத்தங்களுக்குத் தாக்குப்பிடித்து, தமிழீழ விடுதலைப் போராட்டம் எனும் கப்பலைத் தலைமைதாங்கி ஓட்டிச்செல்லும் ஒரு உன்னத தலைவனாக, ஒப்பற்ற போர்த் தளபதியாக தலைவர் பிரபாகரனை உலகம் கருதுகின்றது.

சிங்கள அரசும் அதன் ஆயுதப்படைகளும் பேரினவாத உணர்வுடன் தமிழீழ மக்களைப் பல்லாண்டுகாலமாக அடக்கி ஒடுக்கி வைத்திருக்கின்றது என்பதும், அது தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையை அமைதி வழிமூலம் தீர்க்க விரும்பவில்லை என்பதையும், பல மேலைத்தேய நாடுகளும், உலக நடுநிலை நிறுவனங்களும் உணர்ந்து கொண்டுள்ளன.

இதன் விளைவாக, தமிழீழ மக்கள் தமக்கென ஒரு தனியரசை அமைக்க நடாத்தும் ஆயுதப் போராட்டத்தின் அரசியல் நியாயங்களை, உலகம் புரிந்துணரத் தொடங்கியுள்ளது.

இவ்விதமாக, சர்வதேசரீதியாக புலிகள் இயக்கத்திற்கும் எமது விடுதலைப் போராட்டத்திற்கும், மதிப்பும் - கௌரவமும் உயர்ந்து வந்ததைக் கண்டு இந்திய ஏகாதிபத்தியம் உள்ளூரப் புழுங்கியது.

இந்த நிலையில், புலிகள் இயக்கத்திற்கு உலகரீதியில் ஏற்பட்டுவந்த பிரபல்யத்தையும் ஆதரவையும், சீர்குலைக்கும் நோக்குடன், மீண்டும் ஒரு முயற்சியை இந்திய அரசு எடுத்தது.

புலிகள் தடைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திய தன்மூலம், புலிகள் இயக்கத்தின்மீதும் தலைவர் பிரபாகரன்மீதும் சேற்றை அள்ளி வீசி, புலிகள் இயக்கத்திடமிருந்து தமிழ் நாட்டு மக்களைத் தனிமைப் படுத்திவிட முயற்சிகள் எடுத்தது. தனது தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, புலிகளுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டது. அத்துடன், புலிகள் இயக்கத்திற்குப் "பயங்கரவாத'' முத்திரை குத்தி, சர்வதேசரீதியாகவும் புலிகள் இயக்கத்தைத்தனிமைப்படுத்திவிட்டு, சிங்கள அரசுடன் இணைந்து புலிகள் இயக்கத்தை அழித்துவிட, திட்டம் திட்டியிருந்தது.

புலிகளுக்கு எதிரான ஒரு சர்வதேசச் சூழலை உருவாக்க இந்திய அரசு முயன்ற அதே வேளை, சிங்கள அரசும் தனது முப்படைகளைப் பயன்படுத்தி தமிழீழம்மீது அடுத்தடுத்து பல இராணுவ நடவடிக்கைகளை நடாத்தி, புலிகளை அடிபணிய வைக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தது.

இந்த நிலையில், எமது விடுதலைப் போராட்டம் ஒரு பெரிய நெருக்கடிக்குள் சிக்கிவிட்டதாக நினைத்து, எமது மக்கள் அச்சமடைந்தார்கள். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு சிங்கள அரசின் நிரந்தர அடிமைகளாகத் தமிழீழ மக்கள் வாழப் போகின்றார்களா என்றொரு பயமும், மக்களிடம் ஏற்பட்டிருந்தது. அத்துடன், இந்தியாவின் பகைமை காரணமாக சர்வதேசத்திலிருந்தும் எமது போராட்டம் தனிமைப் படுத்தப்பட்டு விட்டதோ எனவும், மக்கள் அங்கலாய்த்தார்கள்.

இந்த இக்கட்டான நிலையிலும்கூட தமிழ்நாடு உட்பட உலகெங்கும் வாழும் தமிழர்கள், எமது போராட்டம் பற்றியோ எமது மக்களைப் பற்றியோ எந்தவித அக்கறையும் - அனுதாபமும் - காட்டாது வாழாதிருக்கின்றார்களே என்றொரு ஆதங்கமும், எமது மக்களிடம் குடிகொண்டிருந்தது.

ஆனால், இந்திய வல்லாதிக்கம் உள்நாட்டிலும் சர்வதேசரீதியாகவும் புலிகள் இயக்கத்திற்கெதிராகத் தொடுத்த இராஜதந்திர - அரசியல் அழுத்தங்களையும், சட்டரீதியான தடைகளையும்மீறி, உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஆங்காங்கே புலிகள் ஆதரவுப் பேரணிகளை நடாத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்து வருகின்றார்கள்.

தமிழ்நாடு உட்பட உலகின் பலநாடுகளின் நகரங்களில், புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். தலைவர் பிரபாகரனது உருவப்படத்தைத் தாங்கியவாறு, எமது போராட்டத்தின் நியாயங்களை உலகிற்கு எடுத்து விளக்குகின்றனர்.

புலிகளுக்கு ஆதரவு தெரிவித்தாலே கூட சிறைத்தண்டனை வழங்கப்படும் என இந்தியச் சட்டம் இடித்துக்கூறியும், தலைவர் பிரபாகரனை ஒரு பயங்கரவாதி போலச் சித்திரித்துக் காட்ட முயன்றபோதும்கூட, தமிழ்நாட்டில் தலைவர் பிரபாகரனது படங்களைத் தாங்கி புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான கோஷங்களை எழுப்பியவாறு, பல்லாயிரக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள், வீதிகளில் பகிரங்கமாக அணிவகுத்துச் செல்கின்றனர்.

இதே போன்று அண்மையில் இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து மற்றும் நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளிலுள்ள தமிழர்கள் புலிகள் ஆதரவுப் பேரணிகளை -கூட்டங்களை நடாத்தி, போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விதமாக உலகெங்கும் வாழும் தமிழர்கள் புலிகளின் பின்னால் அணிவகுத்து, போராட்டத்திற்கு உறுதி சேர்க்கின்றார்கள்.

இந்திய வல்லாதிக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்மீதுவிதித்தஅநீதியான- அநியாயமான - பழிவாங்கும் உணர்வுடைய - சுயநலமான தடை நடவடிக்கை, தமிழ் நாட்டுத் தமிழர்கள் உட்பட உலகத்தமிழர்களை, படிப்படியாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

இச் சிந்தனைப்பொறி உலகத் தமிழர்களிடையே இங்கொன்றும் அங்கொன்றுமாக, தீப்பொறியாக மாறிவருகின்றது. இது அண்மைக்காலங்களில் உலகத்தமிழர்களிடையே ஏற்பட்டுவரும் இன எழுச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

உலகநாடுகளிலெல்லாம் தமிழர்கள் சிதறி வாழ்ந்துவந்தாலும்கூட, அந்நாடுகளிலெல்லாம் தமிழர்கள் ஒரு பலம் மிகுந்த சக்தியாகவே இருந்து வருகின்றார்கள். பொருளாதார- அறிவியல் துறைகளில் அவர்களின் பலம் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. இந்தப்பலம் ஒன்றுதிரண்டு புலிகள் இயக்கத்திற்கு உதவ முற்பட்டால், எமது விடுதலைப் போராட்டம் பாரிய வெற்றிகளைச் சந்திக்கும் என்பது, உண்மையிலும் உண்மை.

*

## புலிகளின் சிறப்பு வேவுப்பிரிவு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிதறியது. அதற்குள் இருந்த கடற்படையின் உயர் நிலை அதிகாரியான லெப். கொமடோர் அஞ்சனா திசநாயக்கா, தரைப்படைத் தளபதிகளில் ஒருவரான கேணல் சித்ர புஞ்சிஹேறவா, கப்டன் கருணரத்ன ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல், 8.8.92 அன்று அராலியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில், சிங்களப்படையின் அதிஉயர் தளபதிகளான லெப்ரினன்ற் ஜெனரல் கொப்பேகடுவ, றியர் அட்மிரல் ஜயமகா, மேஜர் ஜெனரல் விமலரத்ன, லெப்.கேணல்கள் ஆரியரத்ன, பலிப்பான, ஸ்ரீபன், மேஜர் அல்விஸ், கடற்படை லெப்ரினன்ற் கொமடோர் லங்காதிலக, கடற்படை லெப்ரினன்ற் விஜயபுர ஆகியோரும் அழிக்கப்பட்டனர்.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்ணிவெடித் தாக்குதலுடன், வடபிராந்திய படைத்துறை ஆணைப்பீடம் (Northern Military Command Structure) முற்றாகவே அழிக்கப்பட்டுவிட்டது.

*